Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நளின்
ஆவோற்றப்படும் – ஸ்ரீ
அருள்மொழி களையும்,
முறை களையும், தாங்கி
ாத இதழாகும்.

திய விஜயத்திற்கான
கயாகவும், Cheque /
ாலாம். சந்தாவையும்

பம் மாத இதழுக்கான
டிராப்ட், மணியார்டர்
ரிக்கு அனுப்பிடலாம்.
ப்பிடுதல் வேண்டும்.
ய்வீக சம்பந்தமான
யாரும் தங்களுடைய
தபால்தலை ஒட்டிய
வேண்டுகின்றோம்.

AYAM,
plex,
w Door No. 11),
eet,
276
ar.org.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வ

ஓம் ஸ்ரீவல்லப கணபதி துணை
ஓம் ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி துணை
ஓம் குருவே சரணம

NAMASIVAYA

SIVAYANAMA SIVAYASIVA

SIVASIVA

ஆன்மீகத்தில் வழிவழியாய் வாழும் வழி

இல்லறப் பெண்கள் செய்ய வேண்டிய நித்திய கடமைகளும், நித்திய பூஜைகளும்

JAI SRI AGASTHIA PUBLICATIONS PRIVATE LIMITED

20, Diamond Jubilee Building,
Mailam, Trichy - 620 008.
Phone : 709010, 709782

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

Title of the Book : Illara Pengal Seyya Vendiya Nithya Kadaimagalum, Nithya Poojaikalum

Publisher : Jai Sri Agasthia Publications Private Limited, 20, Diamond Jubilee Building, Mailam, Trichy - 620 008. Phone : 709010, 709782.

Editor-in-Chief : **Shri R.V. Venkataraman**

Associate Editor : Shrimathi Kalavathi Venkataraman

Publication Manager : Shri S. Radhakrishnan

Printed by : Goteti Graphics 64, Thambiah Reddy Road, West Mambalam, Chennai - 33.

Price : Rs. **10.00**

© *All Rights Reserved*

Reproduction of any portion of this book in any form requires the prior permission of the Publisher or Editor.

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



குருமகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ **R.V. வெங்கடராமன்** சுவாமிகளின்
தாயார் ஸ்ரீமதி **V. முத்துமீனாக்ஷி** அவர்கள்
மனமுவந்து அளித்த ஆசியுரையின் தமிழாக்கம்.

ஸ்ரீ ராமஜெயம்

எனது மகன் வெங்கடராமன் பேசிய சொற்பொழிவுகளில் 150க்கு குறையாமல் கேட்டுள்ளேன், அவன் பிறந்தபோது நான் பெற்ற இன்பத்தைவிட அவன் ராமன், கண்ணன், நாராயணன், சக்தி, சிவன், முருகன், குரு இவர்களைப் பற்றிப் பேசும்போது மிக அதிக இன்பத்தைப் பெற்றுவிட்டேன். அனைவரும் சொற்பொழிவுகளின் சாராம்சங்களான அனைத்துப் புத்தகங்களையும் படித்து வெங்கடராமனை ஆசீர்வதிக்கும்படிக் வேண்டி, நான் அவன் தொண்டு உலகெங்கும் பரவ ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி திருவருளால் மனமார ஆசீர்வதிக்கிறேன்.

V. முத்து மீனாக்ஷி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெண்கள் காயத்ரீ ஜெபிக்கலாமா?

அனைத்து வேத மந்திரங்கள் வடமொழி மற்றும் தமிழ் மறைகள் எண்ணற்ற புராணங்கள் அனைத்தையும் வடித்தெடுத்துக் குறள் போல இரண்டே வரிகளில் அள்ளித் தருவதே காயத்ரீ மந்திரம்.

ஜாதி மத பேதமின்றி அனைவரும் ஜபிக்கக் கூடிய எளிய மந்திரம். காயத்ரீ தேவியே பெண்தானே. எனவே பெண்களும் தாராளமாக காயத்ரீ ஜெபிக்கலாம்.

சுமங்கலிப் பெண்கள்:

சுமங்கலிகளுக்கு அவர்களுடைய மாங்கல்யமே பஞ்சபூத சக்திகளின் உறைவிடமாக விளங்க அதுவே அவர்களுக்குப் பூணூலாக அமைவதால் அவர்களும் காயத்ரீ ஜபிக்கலாம். மாங்கல்யம் என்பது மஞ்சள் சரடில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். தங்கச் சங்கிலியில் மாங்கல்யத்தைச் சேர்க்கக் கூடாது. மஞ்சல் சரடில் இல்லாத மாங்கல்யத்திற்கு தோஷங்கன் உண்டு.

கன்னிப் பெண்கள்:

கன்னிப் பெண்கள் குளித்துத் தூய்மையாக அமர்ந்து விளக்கு ஏற்றி 3 அடி நீளமுள்ள நூலை (பஞ்சினால் ஆனது) எடுத்து அந்நூலைக் கையிலேந்தி 21 முறை காயத்ரீ ஜபித்து நூலில் ஒரு முடி போடவேண்டும். இவ்வாறாக எத்தனை முறை வேண்டுமானாலும் முடி போடலாம். பிறகு பூஜை முடிந்தவுடன் அந்த சக்தி வாய்ந்த நூலை ஸ்வாமி மாடத்தில் / பூஜை இடத்தில் வைத்தல் வேண்டும். இவ்வாறாக 21 முடிச்சுகள் அமைந்தவுடன் அந்த நூலுக்கு மஞ்சள் தடவி, குங்குமம் இட்டு சிவன் கோயில் அல்லது ஏதேனும் கோயிலின் தல விருட்சத்தில் கட்டிவிட வேண்டும்.

பலன்: நல்ல இடத்தில் விரைவில் திருமணம் கைகூடும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நூன்முகம்

ஆண்களைவிட ஏழு மடங்கு அதிக ஆன்மீக பலம் உடையவர்கள் பெண்கள். கிருஷ்ண பகவானிடம் எத்தனையோ கோபியர்கள் பக்தி கொண்டிருந்தாலும், அவர்களுள் முதன்மையாக பரந்தாமனின் உள்ளத்திலும் நம் உள்ளத்திலும் நிரந்தர இடத்தைப் பிடித்தவள் ராதையே.

ராமபிரானிடம் எண்ணற்ற முனிவர்களும் ரிஷிகளும் அன்பு கொண்டிருந்தாலும், சபரியின் பேரன்புக்கு இணையான ஒன்றை யாரிடத்தும் காண முடியுமா? அன்பே உருவான சபரி, இன்று சபரி மலையாய் அமர்ந்து கோடானு கோடி பக்தர்களுக்கு அருள் வெள்ளத்தை வாரி வழங்குவதை அனைவரும் அறிவோமே!

'கிரிதாரி!' என்றாலே உள்ளத்தையும் உடலையும் உருக்குகின்றதே மீராவின் கிருஷ்ண கீதங்கள்! ஆனால் இன்றைய உலகில் பெண்களே மீளாத் துன்பத்தில் ஆழ்ந்து உழல்வதாகத் தோன்றுகின்றது. இதற்குக் காரணம் அவர்கள் தங்களது ஆன்மீக பலத்தை உணராததே. அறியாமை என்னும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு பெண்ணினத்தின் அருமை பெருமைகளை அறியாதிருக் கின்றனர்.

புல் பூண்டு முதல் மனிதர்கள் வரை அனைவரையும் உயர் நிலைக்கு இட்டுச் செல்வதையே தன் உயிர் மூச்சாகக் கொண்டு வாழும் திருக்கயிலாயப் பொதிய முனிப்பரம்பரை 1001வது குரு மகா சந்நிதானம் சக்தி ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அடிமை ஸ்ரீலஸ்ரீ R.V. வெங்கடராம

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சுவாமிகள் பெண்களின் முன்னேற்றத்திற்காக அரிய கருத்துக்களை வழங்கியுள்ளார்கள். பரபரப்பான இன்றைய சூழ்நிலையில் பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், தங்கள் கணவன்மார்கள், குழந்தைகளைப் பாதுகாக்கவும், அவர்கள் சிறந்த எதிர்காலத்தைப் பெறவும் இல்லறப் பெண்கள் செய்யும் பூஜைகளே ஒரு சிறந்த பாதுகாப்பாக அமைந்து குடும்பத்தைக் காக்கிறது.

அவ்வப்போது நம் குருமங்கள கந்தர்வாவிடம் (ஸ்ரீலஸ்ரீ வெங்கடராம சுவாமிகள்) ஸ்ரீ அகஸ்திய விஜய வாசகர்கள் கேட்ட கேள்விகளுக்கு, அவர் அளித்த பதில்களையும், மற்ற இல்லறப் பெண்களின் பிரச்னைகளுக்கு அவர் அவ்வப்போது அளித்த அறிவுரைகளையும் தொகுத்து ***'இல்லறப் பெண்கள் செய்ய வேண்டிய நித்திய பூஜைகள்'*** என்னும் இச்சிறு நூலை வெளியிட்டுள்ளோம். இதை இல்லறப் பெண்கள் அனைவரும் படித்து உய்த்துணர்ந்து எல்லாம் வல்ல ஸ்ரீ அருணாசல ஈசனின் திருவருளுக்குப் பாத்திரமாகுமாறு குருவருளை வேண்டுகிறோம்.

ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அடிமைகள்

ஓம் குருவே சரணம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீவல்லப கணபதி துணை
ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி துணை
ஓம் குருவே சரணம்

இல்லறப் பெண்கள் செய்ய வேண்டிய நித்ய கடமைகளும் நித்ய பூசைகளும்

வாழ்க்கையில் இல்லறப் பெண்கள் செய்கின்ற பூசைகளும் அவர்கள் கும்பிடும் தெய்வமுமே நம் குடும்ப ஆண்களுக்கு கவசமாகவும் வாழ்க்கையில் முன்னேற உதவும் வழிகாட்டியாகவும் அமைகிறது.

ஆகவே இல்லறப் பெண்களுக்கு இருக்கும் பொறுப்பைப் போல பளுவான பொறுப்பு வேறு யாருக்கும் கிடையாது.

இவ்வளவு பளுவை திறமையாகவும் சிறப்பாகவும் நடத்த அவர்களுக்கு முக்கிய தெம்பு கொடுப்பது எது என்றால் அவர்கள் கடைபிடிக்கின்ற விரதமும் பூசைகளுமே ஆகும்.

என்னென்ன விசேஷமான பூசை முறைகளையும், விரதங்களையும் அவர்கள் கடைபிடிக்க வேண்டும் என்று குருமங்கள கந்தர்வாவிடம் (ஸ்ரீலஸ்ரீ வெங்கடராம சுவாமி களிடம்) கேட்டபோது அவர் திருவாய் மலர்ந்தருளிய அருளுரைகள்.

அடியார்: நமது முன்னோர்கள் செய்த எளிய பூசை முறைகள் யாதோ?

குருமங்கள கந்தர்வா: நம்முடைய பாட்டிமார்களும் வயதில் உயர்ந்தோரும் செய்து அனுபவித்து எளிய பூசை முறைகளில் ஒன்று காலையில் படுக்கையைவிட்டு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எழுந்தவுடன் கணவனின் பாதங்களைத் தொட்டு வணங்குவது. கலிகாலத்தில் நிறைய குடும்பப் பெண்களிடம் இந்த பழக்கம் குறைந்துவிட்டது. இதற்கு காரணம் தன் கணவனைவிட தான் எதில் குறைந்து விட்டோம் என்ற எண்ணமே ஆகும். இந்த எண்ணத்தைத் தான் ஒவ்வொரு பெண்ணும் முதன் முதலில் எடுத்து எறிய வேண்டும்.

கணவனின் பாதத்தைத் தொட்டு வணங்குவதால் எளிதாக கதிரவனின் பூசையைச் செய்த பலன் வந்து சேரும். ஆண்களாய் இருந்தால் கண்டிப்பாக தூய நமஸ்காரம் செய்தல் வேண்டும்.

அடியார்: குருதேவா! பெண்கள் காலையில் செய்ய வேண்டிய பூசைகளைப் பற்றி விளக்க வேண்டும்.

குரு: இல்லறப் பெண்கள் காலையில் படுக்கையை விட்டு எழும்போது இந்த பாடலைச் சொல்ல வேண்டும்.

நீல மார்தரு கண்டனே நெற்றியோர் கண்ணனே
யொற்றை விடைச்
சூல மார்தரு கையனே துன்றுபைம் பொழில்கள்
சூழ்ந்தழகாய
கோல மாமலர் மணங்கமழ் கோட்டூர் நற்கொழுந்தே
யென்றெழுவார்கள்
சால நீள்தல மதனிடைப் புகழ்மிகத் தாங்குவர் பாங்காலே

(திருஞான சம்பந்தர்)

அடுத்து வீட்டில் எந்தக் காரணத்தைக் கொண்டும் பல் துலக்காமல் காபி, டீ, பால் போன்ற எந்த ஆகாரத்தையும் யாருக்கும் கொடுக்கக் கூடாது. ஏன் என்றால் காலைக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கடன் முடித்து இறைவனுக்கு தீபம் போட்ட பிறகுதான் மற்றவர்களுக்கு காபி, டீ, பால் கொடுக்கலாம்.

பல் துலக்காமல் Bed Coffee பருகுவதால் பேதனாதுருவ தோஷத்திற்கு நாம் ஆளாகின்றோம். காலை சந்தி துருவ சக்திகள் சூரிய சாபத்திற்கு நம்மை ஆளாக்கி விடுகிறது. இதனால் கடன் தொல்லைகள் வர ஏது உண்டு. இல்லறப் பெண்கள்தான் குடும்பத்தில் உள்ளோரை திருத்த வேண்டும்.

அடியார்: குருதேவா இல்லறப் பெண்கள் எவ்வாறு தீபம் ஏற்ற வேண்டும்?

குரு: இல்லறப் பெண்கள் சுவாமிக்கு தீபம் போடும் முன்னும் அடுத்து மின்சார விளக்குகள் போடும் முன்னும் காலை, மாலை மட்டுமல்லாது எப்பொழுது தீபம் விளக்கு ஏற்றினாலும் இப்பாடலை ஓதியே விளக்கு இடுதல் வேண்டும்.

இல்லக விளக்கது இருளைக் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

இவ்வாறு எல்லா இடத்திலும் விளக்கு ஏற்றும் முன் சொன்னால் நெருப்பினால் துன்பம் வராது.

அடியார்: குருதேவா இல்லறப் பெண்கள் அரிசியைக் களையும்போது செய்ய வேண்டிய பூசைகள் யாதோ?

குரு: இல்லறப் பெண்கள் எந்த உயர்ந்த பதவியில் இருந்தாலும் என்னதான் செல்வச் செழிப்பு இருந்தாலும், பல உதவியாளர்கள் இருந்தாலும் வீட்டின் தலைவிதான்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அரிசியை எடுத்து அளிக்க வேண்டும். நீர் விட்டு களையவும் வேண்டும்.

இவ்வாறு செய்யாமல் வேலை ஆட்களை செய்யச் சொன்னால் அவர்கள் எந்த வேதனையோடு அரிசியை எடுப்பார்களோ, என்னென்ன துக்கத்துடன் அரிசி களைவார்களோ என்று யாருக்கும் தெரியாது. அவர் களுடைய துன்ப நினைவுகள், எண்ணங்களால் நாமும் துன்பத்தை அடைய வழியுண்டு. ஆகவே இல்லறப் பெண்கள்தான், அரிசி எடுத்து களைந்து, கல், நெல் பொறுக்கி, அளந்து போடுதல் வேண்டும். அப்படிச் செய்யும் போது ஓத வேண்டிய இந்தப் பாடலை ஓதிக் கொண்டே செய்தால் வரும் பிரச்சனைகள் குறையும்.

அரிசியைத் தொடும்போது

"வளர் நெல்வாயில் வாழுச்சி நாதர்
கிளர் கனகாம்பிகை கிருபாசமுத்திரம்"

என்று சொல்ல வேண்டும்.

அரிசியில் கல், நெல் பொறுக்கும்போது

புடையினார் புள்ளி கால் பொருந்திய
மடையினார் மணி நீர் நெல் வாயிலார்
நடையினால் நால்விரற் கோவணந் நயந்
துடையினா ரெமதுச்சி யாரே

(திருஞானசம்பந்தர்)

என்று சொல்ல வேண்டும்.

அடியார்: குருதேவா! இல்லறப் பெண்கள் பால் காய்ச்சுவதற்கு ஏதேனும் முறைகள் உண்டா?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குரு: இல்லறப் பெண்கள்தான் பால் காய்ச்சுதல் நலம் தரும். நெற்றியில், முகத்தில் மஞ்சள், குங்குமம் இட்டுதான் பால் காய்ச்சுதல் நலம். அமங்கலிகளை முடிந்த மட்டும் பால் காய்ச்சச் சொல்லக்கூடாது. பால் என்பது அமிர்தம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் கணவன்தான் அமிர்தம். ஆகவே கணவனை இழந்தவர்கள் பால் காய்ச்ச வருவதில்லை. அனுமதிப்பதும் கூடாது. (சூழ்நிலை பார்த்து செய்க).

மேலும் குடும்பப் பெண்கள் முடிந்த மட்டும் தாங்களே பால் காய்ச்சுவது நல்லது. அவ்வாறு குடும்பப் பெண்கள் பால் காய்ச்சும்போது இப்பாடலை விடாமல் ஓதியே காய்ச்சினால் அப்பால் சிவ அமிர்தமாய் மாறிவிடுகிறது என்பது பெரியோர்கள் முடிவு ஆகும். இதோ அப்பாடல்

காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச் செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
ஆரா ராதி முதல்வரே

(திருஞானசம்பந்தர்)

அமங்கலிகள் தான் பால் காய்ச்ச வேண்டிய நிலையில் இருந்தால் நெற்றியில் திருநீறு இட்டு பஞ்சாட்சரம் ஜபித்து ***"பாற்றுறை மேவிய பரமா சரணம் சரணம்"*** என்று ஜபித்துக் கொண்டே பால் காய்ச்சுதல் நலம்.

அடுத்து தான தருமம் செய்வதில் இல்லறப் பெண்கள் தன் கணவருக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் தந்து, உறுதுணையாகவும் இருக்க வேண்டும். தானம் செய்வதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து ஊக்குவிக்க

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வேண்டும். இது இல்லறப் பெண்களின் முக்கிய கடமையாகும்.

அவ்வாறு முக்கிய தான தருமங்கள் செய்யும்போது அனைத்து உணவுப் பொருட்களிலும் சிறிதளவாவது நெய் கலந்த உணவினை தானம் செய்யச் சொல்ல வேண்டும். இவ்வாறு நெய் காய்ச்சி உணவில் கலந்து உணவு தானம் ஏழைகளுக்கு, நல்லோர்க்கு, பெரியோருக்கு தானம் செய்திடில், கருவுற்று இருந்தால் சுகப்பிரசம் ஆகும். மற்றோர் இறைவன் அருளுக்குப் பாத்திரமாவர்.

தானத்திற்கு, வீட்டிற்கு நெய் காய்ச்சும்போது ஊற்றும்போது சொல்ல வேண்டிய துதி:

காலனை வீழச் செற்ற கழலடி இரண்டும் வந்தென்
மேலவா யிருக்கப் பெற்றேன் மேதகத் தோன்றுகின்ற
கோல நெய்த் தானமென்னும் குளிர் பொழிற்
கோயின்மேய
நீலம்வைத் தனையகண்ட நினைக்குமா
நினைக்கின்றேனே
(திருநாவுக்கரசர்)

அடியார்: பெண்கள் உணவு பரிமாறும்போது சொல்ல வேண்டிய பாடல்கள் யாவை?

குரு: குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தாலும் தாய், தந்தை மிகவும் முக்கியமானவர்கள். ஆகவே தாய் கையால்தான் குழந்தைகளுக்கு உணவிடுவது மிக முக்கியம். வயதான தாய் தந்தை இருந்தால் முதலில் அவர்களுக்கும் பிறகு குழந்தைகளுக்கும் உணவு பரிமாற வேண்டும். இதை மருமகள், மகள் நன்றாக புரிந்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொள்ளுங்கள். வீட்டில் ஆயிரம் பேர் வேலை ஆட்கள் இருந்தாலும் குழந்தைகளுக்கு தாய் கையால்தான் உணவிட வேண்டும். இதை எந்த இல்லறப் பெண்களும் மறந்துவிடக்கூடாது.

கணவனுக்கும், குழந்தைகளுக்கும் மற்றவர்களை வைத்துப் பரிமாறினால் மனக்குழப்பம் குடும்பத்தில் உருவாகி அதனால் பெருத்த துன்பம் வரும். ஆகவே ஒவ்வொரு குடும்பத்திலும், மனைவியும், தாயும்தான் தன் குடும்பத்திற்கு பரிமாற வேண்டும்.

அப்படி இல்லறப் பெண்கள் உணவு பரிமாறும் போதும், உணவு ஊட்டும் போதும் விடாமல் இப்பாடலை ஓதியே செய்தல் நலம்.

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே

(திருநாவுக்கரசர்)

இல்லறப் பெண்கள் அரிசியை உலையில் இடும்போது சொல்ல வேண்டிய பாடல்

அரிசி கொதித்து வடிக்கும் வரை அல்லது குக்கர் பல விசில்கள் அடித்து gas off பண்ணும்வரை எந்த உணவுப் பொருட்களை சமைக்கும் போதும், காய்கறி, சாம்பார், குழம்பு, ரசம், மோர் உறை ஊற்றும் போதும், எந்த பலகாரங்கள் செய்யும்போதும் இப்பாடலை ஓதியே செய்தல் நலம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முற்றும் சடைமேன் முதிரா இளம் பிறையன்
ஒற்றைப் பட அரவம் அது கொண்டரைக் கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருஆப்பனூரானைப்
பற்றும் மனமுடையார் வினைப்பற் றறுப்பாரே

(திருஞானசம்மந்தர்)

அடியார்: தாய்மார்கள் பிள்ளைகளை வெளியே அனுப்பும்போது எவ்வாறு வழியனுப்ப வேண்டும்?

குரு: இல்லறப் பெண்கள் தங்கள் கணவனுக்கும், குழந்தைகளுக்கும் வெளியில் செல்லும் முன்னும், பள்ளிக்கு செல்லும் முன்னும், எத்தகைய துன்பமும், கண்டமும் வராமலிருக்க அதாவது வீட்டை விட்டு வெளியில் செல்லும் முன் தாய்மார்கள் பிள்ளைகளுக்கு குங்குமம் அல்லது சந்தனம், திருநீறு இட்டு இப்பாடலை ஓதி அனுப்புதல் மிக முக்கியம் ஆகும்.

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே
உற்றாய் என்றுன்னையே உள்குகின்றேன்
உணர்ந்துள்ளத்தால்
புற்றாடரவா புக்கொளியூர் அவிநாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே

(சுந்தரர்)

அடியார்: இல்லறப் பெண்கள் தாங்கள் எதிர் நோக்கும் பிரச்னைகளை எவ்வாறு தீர்த்துக்கொள்வது?

குரு: பிரச்னைகள் இல்லாத வீடு கிடையாது. வீட்டிற்கு வீடு வாசல் உண்டு என்பதுபோல் அவரவர் முன் வினைக்கேற்ப சிறு துன்பங்கள், பெரிய துன்பங்கள் வருவது உண்டு. ஆனால் அவரவருக்குத்தான் தெரியும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவரவர்கள் பிரச்சனை. பிறருக்கு சிறியதாய் தெரிந்தாலும், அனுபவிப்பவருக்கு அது பெரிதாய் தெரியும். ஆகவே மற்றவர்கள் பிரச்னைகளை வைத்து நம்முடைய பிரச்னைகளை சமநோக்காய் நோக்கக் கூடாது. ஆகவே பிரச்சனைகள் வந்தபோது அது சிறியதாய் இருந்தாலும், பெரியதாய் இருந்தாலும் அந்த பிரச்சனைகளுக்கு என்ன தீர்வு செய்வது, எப்படி தீர்வு செய்வது என்று இல்லறப் பெண்கள் திணறும்போது நல்ல வழி தெரிய இந்தப் பாடலை விடாமல் ஓதிக் கொண்டே இருந்தால் நல்ல ஒரு வழி தெரியும்.

செத்தையேன் சிதம்ப நாயேன் செடியனேன்
அழுக்குப்பாயும்
பொத்தையே போற்றி நாளும் புகலிடம் அறிய மாட்டேன்
எத்தை நான் பற்றி நிற்கேன் இருளற நோக்க மாட்டாக்
கொத்தையேன் செய்வ தென்னே கோவல் வீரட்டனீரே

(திருநாவுக்கரசர்)

அடியார்: வயது வந்த பெண்கள் வீட்டிலிருக்கும் போது அவர்களுக்கு குறித்த காலத்தில் திருமணம் செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு இல்லறப் பெரியோர், ஆண்களுக்கும் பெண்களுக்கும் உண்டு. இந்நிலையில் அவர்கள் செய்ய வேண்டியது என்ன?

குரு: திருமணம் என்பது அவ்வளவு எளிதல்ல. அதோடு மட்டுமல்லாமல் மிக எளிதாக திருமணம் ஆனவர்கள் திருமணத்தின் உயர்வை அறியாமல் தூஷணம் பண்ணி கணவனையும் அன்னார் குடும்பத்தையும் பேசுவார்கள், ஏசுவார்கள். ஆனால் திருமணம் ஆகாதவர்கள் திருமணம் புரிய நமக்கு சந்தர்ப்பம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வரவில்லையே என்று ஏங்குவார்கள். இவையெல்லாம் முன்வினைப் புண்ணிய பாவத்தின் பலன்களாகும்.

ஆனால் திருமணமான பெரியவர்கள் தங்கள் இல்லத்தில் வயது வந்த பெண்கள் வீட்டில் இருந்தால், இப்பாடலை ஓதச் சொல்லித் தந்தால் அப்பாடலை அந்தப் பெண்களும் நம்பிக்கையுடன் ஓதினால் நல்ல கணவன் அமைய வழியுண்டு.

முத்தன்மிகு மூவிலைநல் வேலன்விரி நூலன்
அத்தன் எமையாளுடைய அண்ணலிடம் என்பர்
மைத்தழை பெரும் பொழிலின் வாசமது வீசப்
பத்தரொடு சித்தர் பயில்கின்ற பழுவூரே

(திருஞான சம்பந்தர்)

அடியார்: கணவனுக்கு எந்த துன்பமும், எதிரிகளால் ஆபத்தும் வராமலிருக்க மனைவிமார்கள் எத்தகைய பூசைகளைச் செய்ய வேண்டும்?

குரு: வாழ்க்கையில் திருமணமானவர்கள் பலவாறு இறைவனை வேண்டியே கணவனை அடைகிறார்கள். அவ்வாறு திருமணமானவர்களுக்கு முன்வினைகளுக்கு ஏற்ப கணவன்மார்கள் அமைகின்றார்கள். ஆகவேதான் பல அற்புத விஷயங்களை எல்லாம் ஸ்ரீ அகஸ்தியர் விஜயத்தில் பெரியவர்கள் எழுதுகின்றார்கள் குரு அருள் ஆணையின்படி.

இந்த விரதங்களையும், பூசைகளையும் ஒவ்வொரு இல்லறத்தாரும் கடைபிடித்து பயன்பெறலாம். ஆகவே விரதங்களை பூசைகளை எதையும் செய்யாமலும் ஆன்மீக வழிகாட்டிகளை தேவையில்லாமல் திட்டியும், கணவன் செய்கின்ற நற்காரியங்களுக்கு பெருந்தடைக்கல்லாய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருந்தும் வாழ்க்கையை பலவிதமாய் கழிக்கின்றவர்களும் உண்டு.

உண்மையாக கணவனுக்காக வாழும் இல்லத்தரசிகள் என்றும் செய்ய வேண்டிய காரியங்கள் பல உண்டு. அதில் மிக முக்கியமானது யாது எனில் கணவனுக்கு துன்பம் தரும் எதிரிகள் வேலையிலோ, அல்லது வெளி செல்லும் வேறு இடங்களிலோ இருந்தால் அவர்களால் தன் கணவனுக்கு எந்த துன்பமும் வரக்கூடாது என்று செவ்வாய், ஞாயிறு அன்று இப்பாடலை மிக அதிகமாக ஒதி அம்பாளுக்கு (படத்திற்கு) அர்ச்சனை செய்து குங்குமம் எடுத்து வைத்துக் கொண்டு கணவன் தினமும் வெளியில் செல்லும் முன் இப்பாடலை ஒதி நெற்றியில் குங்குமம் இட்டு அனுப்ப வேண்டும்.

வெற்றியூருறை வேதிய ராவர்நல்
ஒற்றி யேறுகந் தேறும் ஒருவனார்
நெற்றிக் கண்ணினர் நீளர வந்தனைப்
பற்றி ஆட்டுவர் பாதூர் அடிகளே

(திருநாவுக்கரசர்)

வீணாக டாடா, பைபை காட்டி கையை ஆட்டி அனுப்பாதீர்கள். 'டாடா' என்று கையை ஆட்டினால், 'மீண்டும் வராதே' என்பது செய்கையின் பொருளாகும்.

அடியார்: பெண்கள் தீய கனவுகளால் வரும் துன்பத்தை எவ்வாறு தடுப்பது?

குரு: கனவு காணாதோர் மிகக் குறைவு. நாம் வாழ்க்கையில் முக்கால் பங்கு கனவில்தான் கழிக்கிறோம். ஆனால் கனவுகளில் படும் துன்பம் உண்மையைப் போலவே இருக்கும். கனவில் படும் இன்பம் உண்மையைப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போலவே இருக்கும். இதுதான் மாயை என்கிறார்கள் பெரியோர்கள்.

ஆனால் தீய கனவால் மனநிலை பாதிக்கப்படுவோர் தினமும் உண்டு. தீய கனவுகள் வராமல் இருக்க இப்பாடலை படுக்குமுன் ஐந்து முறையாவது ஒரு மனதுடன் ஓதுவது நலம் தரும்.

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூடி
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோல மெலாஞ்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே

(திருஞான சம்பந்தர்)

அடியார்: பணக்கஷ்டத்தால் அல்லல்படும் குடும்பப் பெண்களுக்கு அவர்கள் துன்பம் தீர்க்கும் வழிமுறையைக் கூற வேண்டுகிறோம்.

குரு: வாழ்க்கையில் துன்பம் வருவதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் முக்கியமான ஒன்று பணக்கஷ்டம். இதனால் மானம், புகழ், கல்வி, கற்பு அனைத்தையும் இழந்தோர் உண்டு. ஆகவே பெரியோர்கள் தங்களால் இயன்ற தான தருமங்களை தினமும் செய்யுமாறு வகுத்துள்ளார்கள்.

இதைத்தான் ஸ்ரீ அகஸ்திய விஜய மாத இதழில் **'நித்ய கர்ம நிவாரண வழி'** என்னும் தலைப்பில் பல வழிமுறைகளைக் கொடுத்து வருகின்றார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பணக்கஷ்டம் வருவதற்கு பல காரணங்கள் உண்டு. முறையான இறைவழிபாடும், சேவையும், தான தருமங்கள் செய்யாததே முக்கிய காரணமாகும். அதோடு மட்டுமல்லாமல் சத்சங்க தொடர்பு இல்லாதது மிக முக்கிய காரணமாகும். ஆகவே வீட்டில் உள்ளவர்களிடம் இல்லறப் பெண்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். சத்சங்கத் தொடர்பு கொண்டு நற்காரியங்களைச் செய்யத் தூண்டவேண்டும். இதை ஒவ்வொரு இல்லறப் பெண்களும் செய்யாவிட்டால் அவர்களுடைய கடமையிலிருந்து நழுவியவராவார்.

ஆகவே குடும்பத்தில் நியாயமான செலவு செய்ய பணம் தேவைப்படும்போதும், வாழ்க்கைக்கே தேவை யெனப்பட்டால் இப்பாடலை யார் ஒருவர் உண்மையாய் ஓதினால் தெய்வம் பணம் வர வழி செய்யும்.

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொரு நாள்
இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
அவைபூணத் தந்தருளி மெயக்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்தும் பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே

(சுந்தரர்)

அடியார்: குடும்பத்தில் பாகப்பிரிவினை தகராறு வந்தால் இல்லறப் பெண்கள் அதை எவ்வாறு சரி செய்வது?

குரு: குடும்பங்களில் பலவித பிரச்சனைகள் வருவதுண்டு. இதில் பாகப்பிரிவினை என்பது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அனைவரும் அறிந்ததே. என்னதான் ஒன்றாய்ப் பிறந்தாலும், என்னதான் பாசமோடு பழகினாலும் என்னதான் இணைபிரியாத உறவு என்று சொல்லிப் பழகினாலும், தன் குடும்பம், தன் குழந்தைகள், தன் மனைவி என்று வந்தவுடன் வாழ்க்கையில் பலவித மாற்றங்கள் அனைவருக்கும் வந்து விடுகிறது. இதை வென்றவர்கள் மிகச் சிலரே.

அதோடு மட்டுமல்லாமல் சொத்தில் பங்கு தராமல் ஏமாற்றும் தாய், தந்தை, அண்ணன், அண்ணி, அக்கா, தம்பிமார்களும், உறவினர்களும் நிறைய உண்டு இக்காலத்திலும் எதிர்காலத்திலும். உறவினர் பட்டியலையே கொடுத்துவிடலாம். இந்த சொத்துக்கள் வரவேண்டும் என்று உங்கள் தலையில் எழுதியிருந்தால் அந்த சொத்துக்கள் மட்டும் வருவதற்காக இந்தப் பாடல் உதவும்.

ஆகவே பாகப்பிரிவினை சண்டை வந்தால் கோர்ட்டுக்குப் போகாமல் இப்பாடலை குடும்பத்தில் உள்ள அனைவரும் கூடி தினமும் 21 முறைக்குக் குறையாமல் ஒதி வந்தால் உங்களுக்கு எது நன்மையோ அது நடக்கும்.

பூணான் ஆவதேன் அரவங் கண்டஞ்சேன்
புறங்காட்டாடல் கண்டிகழேன்
பேணீராகிலும் பெருமையை உணர்வேன்
பிறவேனாகிலும் மறவேன்
காணீராகிலும் காண்பனென் மனத்தால்
கருதீராகிலும் கருதி
நானேல் உன்னடி பாடுதல் ஒழியேன்
நாட்டியத்தான் குடி நம்பீ

(சுந்தரர்).

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அடியார்: குடும்பத் தகராறுகளால் முக்கியமானவர்களுடைய இறப்பிற்கு குடும்பப் பெண்கள் போகமுடிவதில்லை. இந்நிலையில் அவர்கள் என்ன செய்வது?

குரு: வாழ்க்கையில் பெண் கொடுத்தோருக்கும், பிள்ளை கொடுத்தோருக்கும், எடுத்தோருக்கும் குடும்பத்தில் பல காரணங்களுக்காக சண்டை சச்சரவுகள் வருவதுண்டு. சொத்து, சாதி, மன, இன வேறுபாடுகளில் இச்சண்டைகள் வருவதுண்டு. இதனால் பல குடும்பங்களுக்குள் போக்குவரத்து, செய்தித் தொடர்புகள் விடுபட்டு விடுவதுண்டு.

இவ்வாறு குடும்பத் தகறாரால் முக்கியமானவர்களுடைய இறப்புக்கு போக முடியாவிட்டால் இறந்தவர்கள் மனம் சாந்தியடைய தான தருமம் செய்திடில் இறந்தோர்க்கு மனச் சாந்தி தரும். அன்னார் ஆசியையும் பெறலாம்.

பாலூரும் மலைப்பாம்பும் பனிமதியும் மத்தமும்
மேலூரும் செஞ்சடையான் வெண்ணூல் சேர் மார்பினான்
நாலூர் மயானத்து நம்பான்றன் அடிநினைந்து
மாலூரும் சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே

(திருஞானசம்பந்தர்)

அடியார்: என்னதான் குடும்பப் பெண்கள் பொறுமையாக இருந்தாலும், சில சமயம் குடும்பத்தில் பிரிவினை ஏற்பட்டு விடுகிறது. இதை எவ்வாறு தவிர்ப்பது?

குரு: குடும்பத்தில் பல தொல்லைகள் வருவதுண்டு. வெளியில் சென்று வந்திருப்பவர் என்னென்ன

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிரச்சனைகளை சுமந்து வந்திருப்பார் என்பதை எளிதில் தெரிந்து கொள்ள முடியாது. ஆகவே கணவன், மனைவி, குழந்தைகளின் சிறு வார்த்தைகள் கூட பொறாதாகி பல துன்பங்களுக்கு ஆட்பட நேரிடும்.

ஆகவே சிறு பிரச்சனைகள் பெரிதாகி குடும்பம் பிரியாமலிருக்க இல்லறப் பெண்கள் இப்பாடலை தினமும் ஓதுதல் நலம். ஒருமுறை அல்ல, பல முறைகள்.

மருந்தன் அமுதன் மயானத்துள் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறியலூரில்
விரிந்த மலர்சோலை வீரட்டத்தானே

(திருஞானசம்பந்தர்)

மேலும் பரசலூர் அட்டவீரட்டானத் தலங்களுள் ஒன்று. இங்கு அகோரவீரபத்திரருக்கு தனி சந்நிதி உண்டு. இவருக்கு அபிஷேகம் செய்வது நல்லது.

1. வருடப்பிறப்பு,
2. ஆடிமாதப் பிறப்பு
3. ஐப்பசி மாதப் பிறப்பு

இந்த நாட்களில் அபிஷேகம் நலம் தரும்.

அடியார்: பிரசவ காலத்தில் பெண்களின் தாய்மார்கள் அருகில் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டால் அந்த குறையை இல்லறப் பெண்கள் எவ்வாறு நிவர்த்தி செய்வது?

குரு: இல்லறப் பெண்களுக்கு மிக முக்கியமான தேவைகள் பல. இதில் ஒன்று தன்னுடைய பிரசவ காலத்தில் தன் தாய் உடனிருக்க விரும்புவது ஆகும். பல குடும்ப பிரச்சனைகள் காரணமாய் எல்லோருக்கும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாய்மார்கள் உடன் இருப்பது கிடையாது. அவ்வாறு பிரசவ காலத்தில் புனிதமாய் பூசை செய்து புண்ணிய பலத்தை உடைய தாய் அருகில் இல்லாவிட்டால் இப்பாடலை இல்லறப் பெண்கள் ஓதி அழைத்தால் இறைவன் தகுந்த ஒரு துணையை அனுப்பி தாய் தந்தை இல்லாத குறையைத் தீர்த்து வைப்பார்.

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் கருந்தாழ் குழலி அடிமைகாள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலும் ஆம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயறவு இல்லையே

(சுந்தரர்)

அடியார்: இல்லறப் பெண்களின் நியாயமான விருப்பத்தை கணவன்மார்கள் நிறைவேற்றாதபோது அவர்கள் என்ன செய்வது?

குரு: பொதுவாக இல்லறப் பெண்கள் தங்கள் கணவனிடம் பொய் பேசுவது கிடையாது. ஆனால் தற்காலத்தில் இவ்வாறு கிடைப்பது அரிது. ஆனால் கணவனிடம் பொய்யே பேசாத பெண்கள் தாங்கள் விரும்பியதை கணவனால் அளிக்க முடியாவிட்டால், அவர்களின் விருப்பத்தை மெய்யம்பாள் ஆகிய பராசக்தியே சிவனிடம் சொல்லி நிறைவேற்றி வைக்கிறாள் இப்பாடலை விடாமல் ஓதினால்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விண்ண மர்ந்தன மும்மதில்களை வீழ வெங்கணை
யயலெய்தாய் விரி
பண்ணமர்ந் தொலிசேர் புறவார் பனங்காட்டூர்ப்
பெண்ணமர்ந் தொரு பாகமாகிய பிஞ்ஞகா பிறை சேர்
நுதலிடைக்
கண்ணமர்ந்தவனே கலந்தார்க் கருளாயே

(திருஞானசம்பந்தர்)

அடியார்: கணவன் நோய்வாய்ப்பட்டால் அப்போது இல்லறப் பெண்கள் என்ன பூசை செய்ய வேண்டும்?

குரு: வாழ்க்கையில் உடல் பாதிப்பு என்பது பலருக்கும் அனேகமாக அனைவருக்கும் வருவதுண்டு. ஆகவேதான் இறைவனை அனைவரும் நோயற்ற வாழ்வு வேண்டும் என்று வேண்டுகின்றனர். புண்ணிய பாவத்திற்கு ஏற்ப இறைவன் நோயை வழங்குகிறான்.

கணவன் நோயால் மிகுந்த துன்பம் அடையாமல் இருக்கவும் அப்படி துன்பப்பட்டால் அதிலிருந்து மீளவும் இல்லறப் பெண்கள், இப்பாடலை விடாமல் ஓதுதல் நலம். தினப் பூசையிலும் இப்பாடல் இடம் வகிக்க வேண்டும்.

தங்க லப்பிய தக்கன் பெருவேள்வி
அங்க லக்கழித் தாரருள் செய்தவன்
கொங்க லர்க்குழல் கொம்பனை யாளொடு
மங்க லக்குடி மேய மணாளனே

(திருநாவுக்கரசர்)

அடியார்: இல்லறப் பெண்கள் வளையல் இல்லாமல் மூக்குத்தி இல்லாமல் இருக்கக் கூடாது என்று கூறுவதேன்?

குரு: இல்லறப் பெண்களுக்கு வளையல் ஓர் கவசம் ஆகும். எனவே இல்லறப் பெண்கள் வளையல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அணியாமல் இருக்கக்கூடாது. வளையல் மூக்குத்தி இல்லாமல் உறங்குவதால் பல தீய கனவுகள் வர ஏதுவாகிறது. ஆகவே தினமும் இல்லறப் பெண்கள் தங்கள் வளையல்களைத் தொட்டு சொல்ல வேண்டிய பாடல்களில் இதுவும் ஒன்று.

கோழைமிட றாகவி கோளுமில வாகஇசை கூடும்
வகையால்
ஏழையடியாரவர்கள் யாவைசொன சொல்மகிழு
மீசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்முகின் வீழநீரை தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிக ளூறிவயல் சேறு செயும்
வைகாவிலே
(திருஞானசம்பந்தர்)

அடியார்: இல்லறப் பெண்கள் பெரியோர்களை வணங்கும்போது சொல்ல வேண்டிய துதிகள் என்ன?

குரு: இல்லறப் பெண்கள் தினமும் பெரியோர்களின் பாதத்தைத் தொட்டு வணங்குவது மிகச் சிறந்தது. கணவனின் பாதம் மிக முக்கியம். தாய், தந்தை அல்லது மாமனார், மாமியார் பாதங்களைத் தொட்டு வணங்குதல் மிகவும் நல்லது. அவர்களுடைய வயதால் பெற்ற அனுபவ ஆசி நம்மை வந்தடைகிறது.

ஆகவே இந்தப் பாடலை ஓதி பெரியோர்களை வணங்குவது மிக உத்தமம் ஆகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குலம்பலம் பாவருகுண்டர் முன்னே நமக்குண்டுகொலோ
அலம்பலம் பாவரு தண்புனல் ஆரூர் அவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடியான் திருமூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே

(திருநாவுக்கரசர்)

அடியார்: கவனக் குறைவால் பெரியோர்கள் மேல் கால் பட்டு விட்டால் இல்லறப் பெண்கள் என்ன செய்வது? கணவன் மீதும் கால்படக்கூடாது. இதுவும் கருத்தில் கொள்ள வேண்டும் அல்லவா? குருதேவா!

குரு: ஆம் இல்லறப் பெண்கள் தங்கள் தாய், தந்தை பெரியோர்களிடம் பக்தி செலுத்த வேண்டும். அவர்களை சிவனாக மதித்தல் மிகவும் முக்கியமானது.

கணவன், பெரியோர்கள் மீது கால்பட்டால் ஒத வேண்டிய பாடல் இது.

இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத் தோடிசைந்த வாழ்வு
பறைகிழித் தனைய போர்வை
பற்றியான் நோக்கி னேற்குத்
திறை கொணர்ந் தீண்டித் தேவர்
செம்பொனும் மணியும் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர்
அப்பனே அஞ்சினேனே

(சுந்தரர்)

அடியார்: இல்லறப் பெண்கள் குழந்தைகளைத் தூங்க வைக்கும்போது என்ன பாடல் ஒத வேண்டும்?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குரு: இல்லறப் பெண்கள் வீட்டில் ஏராளமான வேலைகளை விடாமல் செய்து கொண்டே இருப்பர். அவ்வாறு எவ்வளவு வேலை செய்தாலும் வீட்டில் யாரும் அவர்களைப் புகழ்வதில்லை, வேலை வாங்கும் இயந்திரமாகத்தான் நினைப்பர்.

ஆகவே இல்லறப் பெண்கள் ஒரு முக்கியமான வேலை செய்யும்போது இறைவனிடம் இப்பாடலை ஓதினால் அவர்களுக்கு மறவாமல் அருள் ஆசியை உடனே வழங்குகிறான். இந்த நேரம் எப்பொழுது தெரியுமா? கணவனுக்கும், குழந்தைகளுக்கும் படுக்கை விரிக்கும்போதும், படுக்கை உறையை, தலையணை உறையை மாற்றும்போதும் அவர்களை தூங்க வைக்கப் போகும்போதும் சிவனை நோக்கி ஓத வேண்டிய பாடல் இது.

முன்னமே நினையா தொழிந்தேனுனை
இன்னம் நானுனது சேவடி ஏத்திலேன்
செந்நெ லார் வயல்சூழ் திருக்கோளிலி
மன்னனேஅடியேனை மறவலே.

(திருநாவுக்கரசர்)

அடியார்: குருதேவா! பெண்கள் தங்கள் திருமாங்கல்யத்தை என்ன சொல்லி வணங்க வேண்டும்?

குரு: வாழ்க்கையில் இல்லறப் பெண்களால் அதிகமாக மதிக்கப்பட வேண்டியது திருமாங்கல்யம். திருமாங்கல்யத்தைத் தினமும் கண்ணில் ஒற்றி வழிபட வேண்டும். நெற்றியில் குங்குமம் இடும்போதெல்லாம் திருமாங்கல்யத்தை கண்ணில் ஒற்றி தன் கணவன் குடும்பத்திற்கும், கணவனுக்கும், தன்னுடைய வம்சம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிளைகிளையாய் வளர்ந்து செழித்து வாழ வேண்டி பலமுறை ஒத வேண்டிய நித்திய பாடல் இது.

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய் நம்கிளைகிளைக்கும் கேடுபடாத்திறம் அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலி எம்பெருமானே

(திருஞானசம்பந்தர்)

அடியார்: பசியால் வாடும் இல்லறப் பெண்களுக்கு பசி தீர்க்கும் வழியொன்றைக் கூற வேண்டுகிறோம்.

குரு: இல்லறப் பெண்கள் தங்கள் வாழ்நாளில் பலவிதமான துன்பங்களை அனுபவித்துள்ளனர். அதில் கூட்டு குடும்பத்தில் தன் மாமியாரின் உத்தரவுகளை ஓயாமல் நிறைவேற்றிய பிறகு அவர்களுக்கு உணவு சரிவர கிடைப்பதில்லை. எல்லாரும் சாப்பிட்டுவிட்டு சென்றுவிடுவர். மீதம் உள்ள, வயிற்றுப் பசிக்குப் போதாத உணவை அளிக்கும் மாமியார்கள் அன்றும் உண்டு, இன்றும் உண்டு, என்றும் உண்டு!

இவ்வாறான நிலையில் அவதிப்படும் இல்லறப் பெண்கள் தன் கணவனிடம் சொன்னாலும் அதற்குப் பலன் கிடைக்காதபோது இந்தப் பாடலை ஓதினால் நிச்சயமாக அவர்களுக்கு உணவு கிடைக்கும்.

அதோடு மட்டுமல்லாமல் யாராய் இருந்தாலும் உணவு வேண்டும்போதும், பசி எடுக்கும்போதும், சிலர் கணவர்களால் சரிவர கவனிக்காமல் குழந்தைகளுடன் பசியால் கஷ்டப்படும்போதும் இப்பாடலை நித்திய பூசையில் விடாமல் ஓதினால் எப்பொழுதும் துன்பம் வராது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நான் பசித்த போதெல்லாம் தான் பசித்ததாகி
நல்லுணவு கொடுத்து என்னைச்
செல்வமுற வளர்த்தே ஊன் பசித்த இளைப்பு ஒன்றும்
தோற்றாத வகையே
ஒள்ளிய தெள்ளமுது எனக்கு இங்கு
உவந்து வந்து அளித்த வொளியே

(இராமலிங்கர்)

மேற்கண்ட பாடலைப்பாடி கீழே உள்ள பாடலை ஓதினால் உடலை பசியால் மெலிய விடமாட்டார் மருகல் இரத்தினகிரீசர்.

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுள் மெலிவே

(திருஞானசம்பந்தர்)

அடியார்: இல்லறப் பெண்கள் ஆசி கூற வேண்டிய சமயங்களில் எவ்வாறு ஆசி கூறுவது?

குரு: தீர்க்க சுமங்கலிகள்தான் ஆசி கூற தகுதி பெற்றவர்கள். வாழ்க்கையில் இல்லறப் பெண்களுக்கு இது கிடைப்பதற்கரிய ஒரு பாக்கியம் ஆகும்.

இல்லறப் பெண்கள் காலில் யார் விழுந்து வணங்கினாலும் அவர்கள் சொல்ல வேண்டிய ஆசி மந்திரம் உண்டு. பொதுவாக குழந்தைகள் தினமும் தாய் தந்தையை வணங்கியே காரியங்களைத் துவங்குதல் வேண்டும்.

ஆசி கூறச் சொல்ல வேண்டிய மந்திரம் இதோ:

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"கோதின் மங்கலக் குடி மாணிக்கநாதர் மங்களநாயகி
மங்களம், மங்களம், மங்களம் (சிவ)"
என்று வாழ்த்துதல் வேண்டும்.

அடியார்: இல்லறப் பெண்கள் சித்தர்களுடைய அருளை எவ்வாறு பெறுவது?

குரு: இல்லறப் பெண்கள் சித்தர்களுடைய அருளைப் பெறுவது மிக முக்கியம். சித்தர்கள் அருளைப் பெற ஓத வேண்டிய பாடல் இது.

நீரும் மலரும் நிலவும் சடைமேல்
ஊரும் அரவம் உடையான் இடமாம்
வாரும் அருவி மணி பொன் கொழித்துச்
சேரும் நறையூர்ச் சித்தீச்சரமே

(சுந்தரர்)

அடியார்: இல்லறப் பெண்கள் செய்ய வேண்டிய பொதுவான பூசைகள் அல்லாது ஒவ்வொரு கிழமையிலும் செய்ய வேண்டிய விசேஷமான பூசை முறைகளைப் பற்றியும் அறிவிக்க வேண்டுகிறோம்.

குரு: ஒவ்வொரு கிழமையிலும் வழிபட வேண்டிய விசேஷமான சக்கர பூசை முறைகளும் அந்த கிழமைகளுக்குரித்தான அனுக்கிரக மூர்த்திகளும், நைவேத்திய பிரசாத விநியோகமும் உண்டு. ஒவ்வொரு கிழமைக்கும் உரித்தான சக்கரத்தை பச்சரிசி மாவால் வரைந்து குறித்த எண்ணிக்கையில் பாடலைப் பாடிய பின் அரிசி மாவை ஒன்றுதிரட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர், அன்று கோயிலுக்குச் செல்லும்போது குறித்த கோயில்களில் அந்த மாவை எறும்புகளுக்கு உண்ண இடவேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இல்லறப் பெண்கள் கிழமைகள்தோறும் செய்ய வேண்டிய விசேஷமான பூசைகள்

ஞாயிற்றுக்கிழமை

அரிசிமாவால் இச்சக்கரம் வரைந்து 37 முறைக்குக் குறையாமல் ஜபித்து சிவன் கோயில் வில்வ மரத்தடியில் இட வேண்டும் எறும்புகளுக்கு



மூலத்துதிக்கும் ஞாயிறுமாய் முளிரி யிதழ்வாய்ச்
சதுர்முகனாய்
மூல வுந்தித் திருமாலாய் மூளுங்கால காலனுமாய்
மேலுற்றருளுஞ் சதாசிவனும் விரியும் இதழொன்றருள்
பரையும் வித்தாரமுமாய் உலகனைத்தும்
விரிவாய் நின்ற விரிசுடரே, ஞாலத்தமைந்த இருபதமும்
நடனச் சிலம்பும் கிண்கிணியும்
நணுகிப் பெருகும் இந்துநதி ஞானநதியாம் பரமநிதி,
மாலற்றவர்க்கும் உதவிநிற்கும்
மதுர வசனி நவசரணி; மயிலாபுரியில்
வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத் தாயே
(அபயாம்பிகை சதகம்)

நைவேத்தியம்: தேங்காய் பூரணம், நெய்யுடன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திங்கள் கிழமை

அரிசி மாவால் கோலம் வரைந்து இச்சக்கரத்தை 20 முறைக்குக் குறையாமல் ஜபித்து சிவன் கோயில் தல விருட்சத்தின் கீழ் இடவும் எறும்புகளுக்கு.



ஏண்றான் மயக்கத் திருவினையும் மிடியும் வகையும்
போதாதோ
ஏழைதனையே பகைப்பவர்கள் இருமா நிலத்திற்
சலுகை யுண்டாய்
நான்றான் பெரியன் என்றுரைத்த நாவும் வாயும்
அடைத்தெமனார் நகரிற் பயணமாகிவர
நடத்தாய் கருணைச் சுடர் விளக்கே
தான்றான் செய்த வினைமுழுதும் தனக்கே யன்றி
மனக்கவலை தன்னாற் போமோ
என் மனத்துத் தளர்ந்து புழுங்கும் என் செய்கேன்
வான்றான் பரந்த திரிபுரையே மௌனாத்தீ
மலர்க்கொடியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே
அபயாம்பிகைத்தாயே
(அபயாம்பிகை சதகம்)

நைவேத்தியம்: பால்பாயசம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செவ்வாய்க்கிழமை

அரிசிமாவால் இச்சக்கரம் வரைந்து 27 முறைக்குக் குறையாமல் ஜபித்து முருகன் கோயிலில் தல விருட்சத்தின் கீழ் இடவும் எறும்புகளுக்கு.



காமக்கிரிபீ பத்தழகி கனகசபையில் நடனமிடும்
காத்யாயனியே கவுமாரி
காமேஸ்வரியே ஈஸ்வரியே; பூமிதேவி
நான்முகவன் புனிதமனைவி இந்திராணி
புகழ் நாரணியும் தினம் பணியும் பூர்ண கலையே
கதிமுதலே, சோமன் உதய மணிநுதலே
சுருதி ஞான முடிமுதலே, துவாத சாந்த
நிலையாளே
சுகமே ஞான மணிவிளக்கே
வாம நயனி அதிரூபி வனசாகினியே மாமணியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே
அபயாம்பிகைத்தாயே
(அபயாம்பிகை சதகம்)

நைவேத்தியம்: தேன், பழம், கற்கண்டு கலந்து வைத்தல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புதன்கிழமை

அரிசிமாவால் இச்சக்கரம் வரைந்து 21 முறைக்குக் குறையாமல் ஜபித்து பெருமாள் கோயிலில் எறும்புகளுக்கு இடவும்.



பேயேன் ஊமை விழிக்குருடு பேணுஞ் செவிடு
கால்முடமாய்
பிள்ளை எனவே ஈன்றவர்க்குப் பிரிய விடவும் மனமோ
நாயேன் செய்யும் வினை முழுதும் நலமாய்ப் பஞ்சுப்
பொறி எனவே
நகர்த்திச் சிவத்துள் எனதுளத்தை ஞானப் பதியுள்
அருட்கடலே
ஆயே அமலை அருட்கடலே அகிலாதார முடிவிளக்கே
அணங்கே இணங்கும்
அடியவர்க்கு அமுத ஞானம் அருள் அரசே
மாயே செகமோ கனமான வடிவே முடிவே மலைமகளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே
(அபயாம்பிகை சதகம்)

நைவேத்தியம்: பால் பாயாசம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வியாழக்கிழமை

அரிசிமாவால் இச்சக்கரம் வரைந்து 21 முறைக்குக் குறையாமல் ஜபித்து தட்சிணாமூர்த்தி அருகில் வலமாகவும் இடமாகவும் எறும்புகளுக்கு இடவும்.



எந்தன் நினைப்பும் இனிக்கடந்தே ஏகவெளியின்
நிலை தொடர்ந்தே
இரவும் பகலும் அற்ற இடம் இனிதாகிய
பேரொளிவிளக்கே
சந்திக் கரையின் முடிவேற்றித் தனையுந் தலைவன்
அடிசேர்த்துச்
சாட்சாத் காரபூரணமாய்ச் சர்வானந்த மாயிருக்க
உந்தன் இருதாள் மலர்க்கருணை ஒளிசேர் கனகக்
கிரிமுடிமேல்
உதித்தாய் எனது வினையறவும் உமையே
இமையோர்க்கரசான
மந்த்ரக் கலைச்சி நவகோணம் வாழும் யோக நாயகியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே
அபயாம்பிகை சதகம்

நைவேத்தியம்: பால் பாயசம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வெள்ளிக்கிழமை

அரிசிமாவால் இச்சக்கரம் வரைந்து 24 முறைக்குக் குறையாமல் இப்பாடலை ஒதி அம்மன் கோயிலில் தல விருட்சத்தின் அடியில் எறும்புகளுக்கு இடவும்.



நாளோ வினையேர் வீணாளோ நானா
தொழிலுக்கானதுலே
நலஞ்சேர் நிட்டைத் தேவிவரும் நாழி யொன்றாயினும்
இலையோ
தூளைக் குயவன் விதிவசத்தால் துக்கு சுகமும்
தொடர்ந்துவரத்
துன்மார்க்கத்தால் வந்த தென்றுஞ் சொல்வார் பாரில்
சூழ்மனிதர்
வேளைக் கிசைந்த மொழிபேசி வினையிற் புகுந்த சுகம்
போதும்
வினையை ஒழித்தே அமல சுக வெளியைப் பொருத்தி
வினைப்பிறவி
மாளும்படி நீ அருள்புரிவாய் வாலாம்பிகையே
வான்மணியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே
(அபயாம்பிகை சதகம்)

நைவேத்தியம்: பாசந்தி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சனிக்கிழமை

அரிசி மாவால் இச்சக்கரம் வரைந்து 51 முறைக்குக் குறையாமல் ஜபித்து சிவன் கோயிலில் எறும்புகளுக்கு இடவும்.



உச்சிக் கிளியே அருட்கிளியே
உணர்வுக் குணர்வாய் உயிர்க்குயிராய்
உதித்த கிளியே பரவெளியில்
ஒளிவான் பழத்தை உன்னிவரும்
நற்சொற் கிளியே கதம்பவன
நகரில் வாழும் பரைக்கிளியே
ஞானக் கிளியே மறைவனத்தில்
நடனக் கிளியே சிவக்கிளியே
பச்சைக் கிளியே அன்பர் மதி
படரும் ஆவி ஓடையினில்
பரவுங் கிளியே நிதிக் கிளியே
பவழக் கிளியே பதிக்கிளியே
வச்சரக் கிளியே நவபீட
வாசற் கிளியே அருள்அமையும்
மயிலாபுரியில் வளரீசன்
வாழ்வே அபயாம்பிகைத் தாயே *(அபயாம்பிகை சதகம்)*

நைவேத்யம்: புளியோதரை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ராகு

செவ்வாய்க்கிழமை இச்சக்கரம் வரைந்து 18 முறைக்குக் குறையாமல் ஜபித்து சிவன் கோயிலில் எறும்புகளுக்கு இடவும்.



வன்னம் ஒன்றாய் இரண்டாகி
வளர்ந்தோ ரைந்தாய் எட்டாகி
வானாய் வானின் வளிக்கனலாய்
வனமாய்ப் பாராய் வகை ஐந்தாய்ப்
பன்னும் மறையோ நான்காகிப்
பரந்த சாத்ரமுடன் ஆறாய்ப்
பதினென் புராண ஆகமங்கள்
பரிந்தோ ரிருபத் தெட்டாகி
உன்னி நெடுமால் அயனாலும்
உலகை வகுக்கக் காப்பாற்ற
உடனே சங்கா ரித்திடவும்
உமையா ளொடுதன் கேள்வனுமாய்
மன்னி நிதமும் ஆட்டி வைத்த
மதலாய் இமவானுடை மகளாய்
மயிலாபுரியில் வளரீசன்
வாழ்வே அபயாம்பிகைத்தாயே

(அபயாம்பிகை சதகம்)

நைவேத்தியம்: தக்காளி சாதம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கேது

அரிசிமாவால் சனிக்கிழமை அல்லது சதுர்த்தி திதியில் இச்சக்கரம் வரைந்து 17 முறைக்குக் குறையாமல் ஜபித்து பிள்ளையார் கோயிலில் எறும்புகளுக்கு இடவும்.



பேயேன் ஊமை விழிக்குருடு
பேணுஞ் செவிடு கால்முடமாய்
பிள்ளை எனவே ஈன்றவர்க்குப்
பிரிய விடவும் மனமோ
நாயேன் செய்யும் வினைமுழுதும்
நலமாய் பஞ்சுப் பொறி எனவே
நகர்த்திச் சிவத்துள் எனதுளத்தை
ஞானப் பதியுள் அருட்கடலே
ஆயே அமலை அருட்கடலே
அகிலா தாரமுடி விளக்கே
அணங்கே இணங்கும் அடியவர்க்கு
அமுத ஞானம் அருள் அரசே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாயே செகமோ கனமான
வடிவே முடிவே மலைமகளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம்பிகைத் தாயே
(அபயாம்பிகைப் பதிகம்)

நைவேத்யம்: பூரண கொழுக்கட்டை

அடியார்: இல்லறப் பெண்கள் தங்கள் கற்பைப் பாதுகாத்துக் கொள்ள உதவும் பூஜை முறைகள் ஏதேனும் உண்டோ, குருதேவா?

குரு: இதுவரை யாம் அறிவித்த பூஜை முறைகள் அனைத்துமே பொதுவாக பெண்களின் கற்பைப் பாதுகாத்து குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கு ஒரு பாதுகாப்பாக அமையும்.

இருப்பினும் இல்லறப் பெண்கள், மற்ற பெண்களின் கற்பு பாதுகாப்பிற்கும், அவர்களுக்கு வரக்கூடிய நோய்கள் மற்ற அனைத்துத் துன்பங்களிலிருந்தும் பாதுகாக்கும் ஓர் ஒப்பற்ற அரிய சக்தி கவசத்தை ஸ்ரீ இடியாப்ப சித்த ஈச குருவருளால் இங்கு அருளுகின்றோம்.

ஓம் குருவே சரணம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சக்தி கவசம்

அங்கையில் கரகம் தாங்கும் சுந்தர நாயகி அருளினோடும்
துங்கமென் சென்னி காக்க திரிபுரசுந்தரி துகளிலாகம்
எங்கணும் காக்க செய்ய ஏந்தெழில் உண்ணாமுலை
உமை
தங்கும் எண் திசையும் அன்பு தழைத்திட இனிது காக்க.

கொன்னுனைப் பெரியநாயகி மயிரினைக் குறித்துக்
காக்க
மன்னுவெண் பிறைதாழ் அலங்கார நாயகி நெற்றி காக்க
பன்மயிர்ப் புருவம் நாளும் பரிவொடும் சௌந்தர
நாயகி காக்க
என்னையாள் முக்கண் ஈசன் இறைவிகண் இணைகள்
காக்க.

வயமிகும் கருணாம்பிகை மூக்கினை மகிழ்ந்து காக்க
செயையொடு வாளரங்கண்ணி மேல்கீழ் இதழினைச்
சிறந்து காக்க
அயிலுடைச் சுருதி தூய அஞ்செவி காக்க தண்ணென்
பயின்மலர் உறையுஞ் செல்வி சிநேகவல்லி பல்லினை
உவந்து காக்க.

சண்டிமென் கபோலம் காக்க தவளநாள் மலரில் வைகும்
ஒண்தொடி நன்னாக் காக்க குழலம்மைமங் கலைமற்
றொவ்வாக்
கண்கவர் நாடி காக்க அல்லியங் கோதை எஞ் ஞான்றும்
முண்டக மலரில் தூய முகத்தினைச் சிறந்து காக்க.

காளமுண் டிருண்ட பஞ்சின் மெல்லடியம்மை மென்
கழுத்துக் காக்க

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோளில்பூ தாரசக்தி சுவர்ப்புறம் காக்க காளி
நீளொளிச் சந்தி காக்க ஜெயந்தி நெறியி னோடும்
தோளிணை காக்க கிருபாநாயகி துணைமலர் அங்கை
காக்க.

அமுதவல்லி கை விரல்கள் காக்க ஆனந்தவல்லியம்மை
கை உகிர்கள் காக்க
திமிரம்உண் டொளிரும் வெய்யோன் மண்டலத்
துறையும் அம்பிகை
எமதிரு வாகுமூலம் காக்கவா னவர்கள் ஏத்த
கைலாய நாயகி கரிநாள் நாளும் அகன்மணி மார்பம்
காக்க.

கானார்குழலி இதயம் காக்க தயித்தியர்ச் செகுப்போன் மிக்க
கருத்தொடு முலைகள் காக்க சகத்தினில் மங்களநாயகி
திருத்தகு வயிறு காக்க திகழ்தபோ கதிதன்னுள்ளத்
தேனார்மொழி உந்திகாக்க அசைவளர் முதுகு காக்க.

கருதரு விகடை குந்தளநாயகி காக்க கடிதலம் பாமை
வாய்ந்த
குருமணிச் சகனம் காக்க சடைமுடியம்மை குய்யம் காக்க
அருள்தர வரும் பவளக்கொடியம்மை அபானம் காக்க
தெருளுடை விபுலை என்றும் சிறப்புடைக் குறங்கு காக்க.

காவியங்கண்ணியம்மை முழந்தாள் காக்க இயற்சபை
கணைக்கால காக்க
களிதரு கோரை வாய்ந்த பரட்டினைக் காக்க மிக்க
அளிகொள்பா தலத்தில் செல்போள் அணிகெழு
பறந்தாள் காக்க
ஒளிர்நகம் விரல்கள் ஞானபூர்ணாம்பிகை உவந்து காக்க.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தலத்துறை குழல்வாய் மொழியம்மை உள்ளங் காலினை
காக்க தண்ணெண்
மலர்த்திரு பாகம்பிரியா ளம்மை மனையைக் காக்க
வயங்கு கேத் திரதை யோங்கி
உலப்பில்கேத் திரங்கள் காக்க பிரியகரை ஒழிவறாது
நலத்தகு மக்கள் தம்மை அமுதாம்பிகை நன்குறக் காக்க
அன்றே.

உயர்சனா தனிஎஞ் ஞான்றும் ஒழிவறும் ஆயுள் காக்க
மயர்வறு சீர்த்தி யாவும் மையார்தடங்கண்ணி காக்க மிக்க
செயிரறு தருமம் யாவும் வடிவாம்பிகை சிறந்து காக்க
இயல்புடைக் குலத்தை வாய்ந்த குலதேவி இனிது காக்க.

சற்கதி பிரதை நல்லோர் இயைபினைத் தயாவிற் காக்க
விற்கொடும் போரில் நீரில் வெளியினில் வனத்தில்
தூதில்
இற்புறம் அதனில் ஓங்கு மனோன்மணி காக்க என்னாப்
பொற்றரு மலர்கள் தூவிப் புங்கவர் ஏத்தி னாரே.

எல்லாவித தீய சக்திகளிலிருந்தும் பெண்களைக் காக்கும் இத்துதியை புவனேஸ்வரி தேவி செவ்வாய் பகவானுக்கு ஓதி, செவ்வாய் பகவான் பிப்லாத மகரிஷிக்குச் சொல்லி அவர் மூலம் மக்கள் அனைவருக்கும் இப்போது அறிவித்துள்ளோம்.

இல்லறப் பெண்களும் மற்றவர்களும் இரவு பகல் எந்நேரமும் ஈடு இணையற்ற இந்த சக்தி கவசத்தை ஓதி எல்லா நலன்களையும் பெறலாம்.

ஓம் குருவே சரணம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குழந்தை பரிபாலனம்

ஒரு தாய் கருவைச் சுமந்து குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை ஒவ்வொரு மாதக்கருவிலும் ஒவ்வொரு ரூபத்திலும் ஒவ்வொரு நாமத்தைத் தாங்கி எம்சிவபெருமான் காக்கின்றான்.

கருவுற்ற மாதம்	வணங்க வேண்டிய தெய்வம்	வழி கூறிய சித்தர் பெருமான்
ஒன்று	முல்லைவன நாதர் கருகாக்கும் நாயகி	கழுவெளிச் சித்தர்
இரண்டு	சந்திரசேகரன்	தொள்ளைக்காது சித்தர்
மூன்று	பசுபதியான சொக்கநாதன்	கரப்பாத்திர சித்தர்
நான்கு	திருநீலகண்டன்	வேட்டவலம் சித்தர்
ஐந்து	பஞ்சாட்சர ரூபன்	சிலக்காகிதச் சித்தர்
ஆறு	சுக்ரனோடு சேர்ந்த வெள்ளீஸ்வரன்	தொள்ளைக்காது சித்தர்
ஏழு	ஏகாம்பரேஸ்வரன்	பாட்டப்பவன் சித்தர்
எட்டு	கபாலீஸ்வரன்	சிலக்காகிதச் சித்தர்
ஒன்பது	அருணாசலேஸ்வரன்	இடைக்காட்டு சித்தர்
பத்து	தாயுமானவன்	சாரமா முனிவர்

கருவுற்ற தாயானவள் அந்தந்த மாதத்திற்கு உரிய சிவநாமங்களைப் பாராயணம் செய்தல் வேண்டும். அந்தந்தத் திருத்தலங்களில் கணவன்மார்கள் கர்ப்பிணி களுக்கு உரிய தானங்களைச் செய்வது விசேஷமான தாகும்.

கருவைக் காக்கும் நாயகி திருக்கருகாவூர் அம்மன் ஸ்ரீகர்ப்பரட்காம்பிகை நாமஸ்மரணமும் அவசியம் செய்தல் வேண்டும்.

ஓம் குருவே சரணம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ

ஸ்ரீ

சே

(பழைய

ஸ்ரீ கபாலீஸ்வ

மயிலாப்பூர், சென்ன

ஸ்ரீ அகஸ்திய விஜயம் ஆன்மீக
லோபா மாதா அகஸ்தியர் ஆஸ்
பிரதோஷ மகிமை, ஸ்ரீ ஐயப்
சுபமங்கள தீப மகிமை, ஸ்ரீ சர
நூல்கள், திருஷ்டி தோஷ நிவா
ஷோடச நித்யா துளசி மாடம் மற்
போன்றவற்றை அன்பர்களுக்
விலாசத்தில் சென்னை மயில
அருகில் புதிய கேந்தராலயா தி
பல பொருட்களையும் ஆர்
உத்தேசித்துள்ளோம். அ
கருணையுடன் கைகூடப் பிரா

அருணாசல
(ARUNACHAL

நம் பெரியோர்கள் ஆற்றி வ
திருஅண்ணாமலையாரின்
அருணாசல கிரிவல மஹிமை
மத, இன,
யாவர்க்
ஸ்ரீலஸ்ரீ
முறை
தரு
ஸ்ரீ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,